அனுமதியைப் பெறவேண்டியிருக்கின்றது. அனுமதி கிடைத்தவுடன்தான் அலுவலகம் கட்ட முடியும். ஏனென்றால் நாங்கள் அறிவிக்கின்றோம்; அறிவித்தபின், அந்த இடத்தைப் பெறுவதிலே சிறிது காலதாமதமாகிவிடுகிறது. துறையின் வாயிலாகக் கோப்புகளை அனுப்பி, அனுமதி பெறுவதில் சிறிது காலதாமதம் ஆகிவிடுகிறது. இருந்தாலும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

பாதாள சாக்கடைத் திட்டம்

***5663—திரு. கே. பழனி**:

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக கசடு கழிவு அகற்றும் மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2019 பிப்ரவரி 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.

திரு. கே. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், எங்களையெல்லாம் வளர்த்து ஆளாக்கிய இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மாவினுடைய அரசை தலைமையேற்று சீரோடும் சிறப்போடும் நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு. ஓ.பி.எஸ். அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். இந்த சிறந்த திட்டத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தொகுதி மக்களின் சார்பாகவும், எட்டு கோடி தமிழக மக்களின் சார்பாகவும் பாராட்டுகிறேன். மக்களுடைய எண்ணங்களை நிறைவேற்றி, பொங்கல் பரிசோடு ஊக்கத் தொகை ரூபாய் ஆயிரம் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் ஒரத்தூர் அடையாறு ஆற்றின் குறுக்கே ஒரத்தூர் கிராமத்தில் உபரி நீரைத் தேக்குவதற்காக ஓர் அணை கட்டப்படும் என அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, இன்னொரு திட்டத்தை, இதுவரை யாரும் அறிவிக்காத ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இதற்கு முன்பு எத்தனையோ சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தத் தொகுதியிலிருந்து வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பில் திருமதி டி. யசோதா அவர்கள் 20 வருடங்கள் இந்தத் தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. போளூர் வரதன் ஐந்தாண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அருமை பெரியவர் திரு. கோதண்டம் ஏழரை ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. ஆர். பெருமாள் 5 வருட காலம் சட்டமன்ற உறுப்பினராக

2019 பிப்ரவரி 11]

இருந்தார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசை வழிநடத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றியுள்ளார்கள். கோடம்பாக்கம்-ஸ்ரீபெரும்புதூர் சாலை மிக நீளமான சாலையாக இருக்கிறது. எங்கள் தொகுதியில் செம்பரம்பாக்கம் ஏரி இருக்கிறது. பருவமழைக் காலங்களில் அந்த ஏரியிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகின்றபோது போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுகின்ற சூழ்நிலை உள்ளது. என்னுடைய கோரிக்கையை ஏற்று, அந்த இடத்தில் ஒரு மேம்பாலம் கட்ட அறிவித்து, அது project section ஆல் தேர்வுசெய்யப்பட்டு, NH Department இடம் ஒப்படைக்கப்பட்டு, 129.18 கோடி ரூபாயை சாலை மற்றும் மேம்பாலத்திற்காக இன்றைக்கு ஒதுக்கியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கசடு கழிவு அகற்றும் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று சொன்னார்கள். எங்களுடைய தொகுதியில் குன்றத்தூர் பேரூராட்சி பெரிய பேரூராட்சி; 70,000 மக்கள் வசிக்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் கிராம மக்கள் தினந்தோறும் இப்பகுதிக்கு வந்து செல்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற வகையில், அந்த 70,000 மக்களுக்கு மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதி தேவைப்படுகின்றது. அப்பகுதியிலுள்ள வீடுகளைச் சுற்றி தேங்கியிருக்கும் கழிவுநீரை அகற்றுவதற்காக பாதாள சாக்கடைத் திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இன்னொரு துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கின்றது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கே. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அறிவிக்குமாறு மாண்புமிகு உள்ளாட்சித் துறை

அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு உள்ளாட்சி அமைப்பின்மூலம் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்துவதில் எதிர்வரும் சிரமங்களைக் கருத்தில்கொண்டு, மாற்று ஏற்பாடாக, கசடு கழிவு அகற்றும் மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்த கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதனடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடி அவர்கள், 51 நகராட்சிகள் மற்றும் 59 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையிலே, கசடு கழிவு அகற்றும் மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்த 49 நகரங்களில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என விதி 110-ன்கீழ் அறிவிப்பு வெளியிட்டார்கள். அதன்படி, 51 நகராட்சிகள் மற்றும் 59 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 49 நகரங்களில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க அரசாணை எண் 88, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31-8-2018-ல் நிருவாக அனுமதி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் பேரூராட்சியில் 54,956 மக்கள் பயன்பெறும்வகையில், கசடு கழிவு அகற்றும் மேலாண்மைத் திட்டம் முன்னுரிமை அடிப்படையில் விரைவில் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.

திரு. கே. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் எதைக் கேட்டாலும் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பழுதுபார்க்குமாறு கேட்டவுடனேயே அனைத்துச் சாலைகளையும் செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுத்து, தொகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் காட்டினார்கள். அதேபோன்று

2019 பிப்ரவரி 11]

குன்றத்தூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். இத்திட்டம் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காக, உடனடியாக இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. எஸ். அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். வந்தவாசி நகராட்சியில் சுமார் 24 வார்டுகள் உள்ளன. அங்கே சுமார் 70,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். பாதாள சாக்கடைத் திட்டம் இல்லாததால், கழிவுநீர் ஆங்காங்கே தேங்கி, சுகாதார சீர்கேடு ஏற்படுகின்ற சூழ்நிலை உள்ளது. அதுமட்டுமல்ல; வந்தவாசி நகராட்சியின் அருகிலுள்ள சுக நதி நீரிலும் அந்தக் கழிவுநீர் கலக்கின்றது. அந்தக் கழிவுநீரை அகற்றி, மாசு ஏற்படாமல் தடுத்து சுக நதி நீரைக் காப்பாற்ற, வந்தவாசி தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற பாதாள சாக்கடைத் திட்டம் அந்த நகராட்சியில் செயல்படுத்தப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வந்தவாசி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவது குறித்துக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசால் தமிழகத்தில் இருக்கக்கூடிய 124 நகராட்சிகள், 12 மாநகராட்சிகள், 528 பேரூராட்சிப் பகுதிகள், வளர்ந்த நகரங்கள் மற்றும் வளர்ந்து வருகின்ற நகரங்கள் என அனைத்திலும் முழுமையாக பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த வேண்டுமென்று கொள்கை முடிவெடுக்கப்பட்டது. பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தளவில் சுத்திகரிப்பு நிலையம்*

அமைப்பதற்கான இடத்தினைக் கண்டுபிடிப்பது மிகப் பெரிய சவாலாக இருக்கிறது. குறிப்பாக 31,320 மக்கள் தொகை மற்றும் 24 வார்டுகளைக் கொண்ட வந்தவாசி நகராட்சியில், தினசரி சேரும் கழிவுநீர் 20 கே.எல்.டி. ஆகும். அங்கு கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான மதிப்பீடு சுமார் ரூ.2.50 கோடி ஆகும். இத்திட்டத்தைப் பகுதி I-ல் சேர்த்துக்கொள்ள பணியாணை வழங்கப்பட்டிருக்கிறது. பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இடப் பிரச்சினை காரணமாகத்தான் கசடு கழிவு அகற்றும் மேலாண்மைத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று கண்டிப்பாக பணிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.*

டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருப்பதுபோல், பேரூராட்சிப் பகுதிகளில் கழிவுநீரை சரியான முறையில் வெளியேற்றுவதில் இன்னும் சிரமங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, சிறப்பான வகையில், கசடு கழிவு அகற்றும் மேலாண்மைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியதற்கு எங்களுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

என்னுடைய தொகுதியில், பாளையம் மற்றும் குஜிலியம்பாறை பேரூராட்சிப் பகுதிகளில் முறையான வாய்க்கால்கள் மூலமாக வெளியேற்றுவதற்கு முடியாத ஒரு சூழ்நிலையில் கழிவுநீர் ஆங்காங்கே தேங்கி இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இப்பகுதி கிராமங்கள் நிறைந்த பகுதி. பேரூராட்சியாக இருந்தாலும்கூட, கிட்டத்தட்ட 5, 6 வார்டுகளில் அதிக அளவில் கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பாளையம் மற்றும் குஜிலியம்பாறை பேரூராட்சிப் பகுதிகளில், அதிலும், குறிப்பாக குஜிலியம்பாறை மற்றும் பாளையம் மெயின் ரோடுகளிலிருக்கின்ற வணிகர்களுடைய கோரிக்கையான வாய்க்கால்கள் மூலமாகவோ அல்லது கசடு கழிவு

2019 பிப்ரவரி 11]

அகற்றும் மேலாண்மைத் திட்டத்தின் மூலமாகவோ கழிவுநீரை வெளியேற்ற முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், கழிவுநீர் வாய்க்கால்கள் அமைக்க முடியாத கிராமங்கள் இருக்கின்ற பேரூராட்சிகளில், community soak pits அல்லது individual soak pits அமைக்க வேண்டும். ஊராட்சிப் பகுதிகளில் 100 நாள் வேலைத் திட்டத்தில் individual soak pit சிறப்பாக அமைத்துக் கொடுக்கிறார்கள். பேரூராட்சிகளில் எங்கெல்லாம் கழிவுநீர் வாய்க்கால்கள் அமைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறதோ, அங்கெல்லாம் டவுன் பஞ்சாயத்து மூலமாக soak pits அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்டபடி, தற்போது 59 பேரூராட்சிகளில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பேரூராட்சியை முன்னுரிமை அடிப்படையில் எவ்வாறு சேர்த்துக்கொள்ளலாம் என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடனும், துறை அதிகாரிகளுடனும் கலந்து பேசி, அந்தப் பணிகளை எடுக்க கண்டிப்பாக முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் soak pits அமைப்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். Soak pits அமைப்பதைப் பொறுத்தளவிற்கு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் நிறைய இடங்களில் பணிகள் செய்து கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, தடுப்பணைகள் (check dams) கட்டுகிறோம். குறு, சிறு தனியார் விவசாய நிலங்களில் சிறிய, சிறிய வாய்க்கால்கள் மற்றும் பள்ளங்களில் இதுபோன்ற தடுப்பணைகளைக் கட்டி வருகிறோம். இத்திட்டத்தின்கீழ் நிறைய soak pits-ஐ கட்டிவருகிறோம்.

பேரூராட்சிகளில் இதுபோன்று அமைப்பதற்கு நிறைய சிரமங்கள் இருக்கின்றன. இருந்தாலும்கூட, நிதிநிலை

அடிப்படையில், கண்டிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள மதுராந்தகம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவருவதற்கு 2010 ஆம் ஆண்டு ரூபாய் 52 கோடியே 62 இலட்சம் ரூபாய்க்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. இதுநாள் வரை அந்தப் பாதாள சாக்கடைத் திட்டம் தொடங்கப்படவில்லை. கழிவுநீர் தேக்கத்தின் காரணமாக கொசுக்கள் தொல்லை பெரிய அளவில் இருக்கிறது. மேலும், மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் வரக்கூடிய சூழ்நிலையெல்லாம் இருக்கிறது. ஏற்கெனவே திட்டமிட்ட அந்த பாதாள சாக்கடைத் திட்டம் எந்த நிலையிலே இருக்கிறது என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு சிறிய கோரிக்கை. கடந்த ஒன்றரை வருடங்களாக மதுராந்தகம் நகராட்சிக்கு* Commissioner *நிரந்தரமாக இல்லை. தயவு செய்து, அந்நகராட்சிக்கு ஒரு* Commissioner-*ஐ நியமித்தால் நன்றாக இருக்கும். இதுகுறித்து நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, பாதாள சாக்கடைத் திட்டம் குறித்து கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.*

திரு. சு. புகழேந்தி: *தொகுதி பிரச்சினைதான். நான் தவறாக எதுவும் கேட்கவில்லை. எனவே, அதையும் நிறைவேற்றித் தருமாறு தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

2019 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்களுடைய ஆட்சிக் காலத்திலே, மதுராந்தகம் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு நிதியொதுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் 55 பாதாள சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 20 திட்டங்கள் மட்டுமே செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. எஞ்சிய 35 திட்டங்களில் 18 திட்டங்களுக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்ட நிலையில், 17 திட்டங்கள் அறிவிக்கப்பட்ட நிலையில், உங்கள் ஆட்சியில் கைவிடப்பட்டன. எடுக்கப்பட்ட 20 திட்டங்களில் ஒரே ஒரு திட்டமாக பல்லாவரத்தில் மட்டும்தான் முடித்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் ஆட்சிக்கு வந்தவுடன், தி.மு.க. ஆட்சியில் எடுத்துக்கொள்ளப்பட்ட 19 திட்டப் பணிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்து,* work order *கொடுத்து, இப்போது 16 பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன.*

எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மதுராந்தகம் நகராட்சியைப் பொறுத்தவரையில், பாதாள சாக்கடைத் திட்டத்திற்குக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வளர்பிறை கிராமத்தில் இடம் தேர்வு செய்து, நில ஆர்ஜிதம் செய்ய காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, காஞ் சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் 15482/2010, 25-1-2013 அன்று வருவாய்த் துறைக்கு அனுப்பப்பட்டு, மேல்நடவடிக்கையில் உள்ளது. இதற்குரிய கட்டடம் கட்ட ரூ.3.09 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது.இத்திட்டத்தினைச்செயல்படுத்தும்வரையில், நகரில் சேகரமாகும் கழிவுநீர், லாரிகள்மூலம் சேகரிக்கப்பட்டு மதுராந்தகம் நகராட்சிக்கு அருகில் உள்ள கருங்குழி பேரூராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் கொட்டப்பட்டு வருகிறது. எனவே, இத்திட்டத்தை எப்படிச் செயல்படுத்தலாம் என்பது குறித்து துறையின்மூலம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*